10/-

நூலகம்
1994

# யாழ் குடாநாட்டுள் விறகு வெட்டுவதை ஒழுங்குபடுத்தும் சட்டம்

## 1993

யாழ்ப்பாணம்
சேவை

## 1993ம் ஆண்டின் 04ம் இலக்கச் சட்டம்

நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

தமிழீழப் பிரதேசத்தில் யாழ் குடா நாட்டினுள் விறகுத் தேவையின் அதிகரிப்பாலும், பயன்பாட்டின் அதிகரிப்பினாலும், அவ்விறகினை யாழ் குடாநாட்டினுள்ளேயே பெற்றுப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளமையினாலும், துவிச்சக்கரவண்டிகளிலும், இதர வாகனங்களிலும் எடுத்துச் செல்கின்றனர். இவ்விற கிற்காக யாழ் குடாநாட்டினுள் காணப்படும் பற்றைக்காடுகள், பெரிய மரங்கள் என்பவைகளினை வெட்டிச் செல்லுகின்றமை யினாலும், இது சூழல் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைவதாலும், இவ் விறகு வெட்டுதலை ஒழுங்குசெய்து கட்டுப் படுத்தவும், இதனகத்து அறவிடப்படும் பணம் மீள் மரநடுகைக் காக பயன்படுத்துவதற்குமானதொரு சட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர் களின் ஒப்புதலின் அடிப்படையில் சட்டமாக்கப்படுகிறது.

01. இச்சட்டம் யாழ். குடாநாட்டுக்குள் விறகு வெட்டுவதை ஒழுங்குபடுத்தும் சட்டம் எனப்படும். இது 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்01ம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்.

02. விறகுத் தேவையின் காரணமாக நீண்டகாலம் பயன்தரும் மரங்களையும், சிறு பற்றைகளையும், கண்டல்காடுகளையும் வெளிகொண்ட பிரதேசங்களிலாயினும், பொது இடங் களிலாயினும் இச்சட்டத்தின் ஒழுங்குகளினை மீறி வெட்டு வது குற்றமாகும்.

03. எவராகிலும் யாழ். குடாநாட்டுப் பகுதியுள் ஓர் இடத்தில் இருந்து இன்னும் ஒரு இடத்திற்கு விறகினை எடுத்துச் செல்வதாயின், அதற்காக ஓர் அனுமதிப்பத்திரத்தினைப் பெறல் வேண்டும். இவ்விறகினை எடுத்துச் செல்வதற் காக அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு என ஒவ் வொரு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட அலுவலகங்களிலும், ஒவ்வொரு விசேட அலுவலர் நியமிக் கப்பட்டு இருப்பார். இவர் விறகினை எடுத்துச் செல் வதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கொடுத்து, மீளப் பெறுவதோடு பரிசீலித்து அனுமதியையும் வழங்குவார்.

விதிவிலக்கு: தென்னை, பனை, தேங்காய் என்பவைகளின் மட்டை, கதிகால்கள், ஊமல் என்பன கொண்டு செல் வதற்கு அனுமதிப்பத்திரம் அவசியமில்லை.

04. இவ்வட்ட விசேட அலுவலர், அனுமதியின்றி ஒருவர் விறகினை எடுத்துச் செல்வதைக் கண்காணிக்கவும், அத் தகைய நபரைக் காவல்துறையில் ஒப்படைக்கவும் அதிகார முடையவர்.

## விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதனைச் சார்ந்த அமைப்புகளும் தமது தேவைக்கான விறகினைப் பெறுவதற்காக அவ்வப்பகுதி விசேட வட்ட அலுவலரிடம் அதற்கான பணத் தினைச் செலுத்தி விறகினைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

## விளக்கம்

விறகு வெட்டப்படுதல் அதிகமாகத் தென்மராட்சிப்பகுதியில் இடம் பெறுவதனால் அப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் விறகு விற்பனை நிலையம் ஒன்றின் ஊடாக விறகுக் கொள்வனவாளர்கட்குத் தேவையான விறகினை வழங்கும். இவ்விறகு விற்பனை நிலையம் மூலமாகப் பெறப்படும் நிதி முழுவதும் ''மீள் மரநடுகைக்காகவே'' பயன்படுத்தப்படல் வேண்டும்.

05. தென்மராட்சிப் பகுதியில் குறித்த விறகு விற்பனை நிலை யங்களில் இருந்து விறகினைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து அனுமதியினை, பளை வட்டச் செயலகத் தில் பெற்றுக்கொள்ளலாம்.

## விளக்கம்

இச்சட்டத்தின் பிரகாரம் உள்ளூரில் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு விறகு கொண்டுசெல்வதானாலும் கூட போக்குவரத்து அனுமதியினைக் குறித்த அவ்வவ் வட்டச் செயலகங்களில் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேட அலுவல ரிடம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

06. அ. விறகு எடுத்துச் செல்வதற்கான போக்கு வரத்து அனுமதிப் பத்திரமானது 24 மணி நேரத்திற்குச் செல்லுபடியானதாகும் என்பதுடன் இவ்வனுமதிப்

பத்திரத்தினை ஒரே ஒரு தடவை விறகினை எடுத்துச் செல்வதற்கு மட்டுமே பாவிக்கலாம்.

விளக்கம்

அனுமதிப்பத்திரம் காலாவதியாகும்போது, அனுமதி வழங்கிய வட்ட விசேட அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டு மீளப் புதுப்பிக்கப்படும்.

ஆ. ஒவ்வொரு வட்டாரங்களிலும் நிதித்துறையால் பதிவு செய்யப்பட்ட விறகு விற்பனை நிலையங்களில் 'நுகர்வோரைத், தத்தமது தேவைக்காக விறகுகளைக் கொள்வனவு செய்யும்போது, அந்நிலையத்தால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுடன் விறகினைக்கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படும்.

07. இச்சட்டத்திற்கு முரணாக அனுமதியின்றி விறகினைக் கொண்டு செல்லும் எவரையும், தமிழீழ காவல்துறையினர் கைது செய்து உரிய தமிழீழ நீதிமன்றினில் முற்படுத்தி குற்றவியல் ஒழுங்கினில் வழக்கிடப்படல் வேண்டும்.

08. அனுமதியின்றி விறகு கொண்டுசெல்லும் எவரிடமும் அவர் கொண்டுசெல்லும் விறகின் பெறுமதியின் மூன்று மடங்கு பெறுமதியான குற்றப்பணம் அறவிடப்படுவதுடன், அவர் அனுமதியின்றிக் கொண்டுசென்ற விறகினையும் பறிமுதல் செய்யப்படும்.

09. பின்வருமாறு விறகு எடுத்துச் செல்வதற்கான மீள் நடுகை நிதி அறவிடப்படும்.

01. ஒரு லொறி விறகுக் குவியல் (லோட்) ரூபா 1000/-

02. ஒரு உழவு இயந்திர விறகுக் குவியல் (லோட்) ரூபா 500/-

03. ஒரு இருசக்கர இழுபொறி ஊர்திக்குவியல் (லான்ட் மாஸ்ரர்) ரூபா 300/-

04. இரட்டை மாட்டு வண்டி விறகுக் குவியல் ரூபா 200 /-

05. ஒற்றை மாட்டு வண்டி விறகுக் குவியல் ரூபா 100 /-

விதிவிலக்கு

துவிச்சக்கர வண்டில்களில் கொண்டுசெல்லும் விறகிற்கு மீள் மரநடுகைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.